24th January 1970]

திரு. எம். எத்திராஜுலு : குதிரைப் பந்தயத்தில் விற்கப்படும் டிக்கெட்டுகள் ஒவ்வொன்றிற்கும் தமிழக அரசுப் பரிசுச் சீட்டு ஒவ்வொன்று வாங்க வேண்டுமென்று அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நிர்ப்பந்தம் ஒன்றுமில்லை. அவரவர்கள் விருப்பத்தைப் பொறுத்து வாங்குவது இது.

Mr. CHAIRMAN : Questions 23 and 38 are postponed.

Police Force.

***41. Q.—Thiru M. RAJAH IYER : Will the Hon. the Chief Minister be pleased to state —**

(*a*) whether there is any proposal to increase the strength of the Police Force in the State ; and

(*b*) if so, the details thereof ?

காவல் படை.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இம்மாநிலத்தில் காவல் படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Police Stations.

***42. Q.—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any Government Order stating that the Police Stations should register certain minimum number of cases (of law and order) every month ;?**

காவல் நிலையங்கள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :—

காவல் நிலையங்கள் ஒவ்வொரு திங்களிலும் சட்டமும், ஒழுங்கும் பற்றி குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள வழக்குகளைப் பதிவு செய்ய வேண்டும் என வரையறுத்து அரசு ஏதேனும் ஆணை பிறப்பித்ததா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இல்லை.

Demonstrators and Tutors in Engineering Colleges.

***43. Q.—Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state —**

(*a*) whether Demonstrators and Tutors in Engineering Colleges are paid salaries according to the University Grants Commission scales of pay ; and

(*b*) if not, the reasons therefor ?

[24th January 1970

பொறியியற் கல்லூரிகளில் பணியாற்றும் கட்புல விளக்குநர்கள் சிற்றுசிரியர்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி–சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) பொறியியற் கல்லூரிகளில் பணியாற்றும் கட்புல விளக்குநர் கள் (Demonstrators) சிற்றுசிரியர்கள் (Tutors) ஆகியோருக்குப் பல்கலைக் கழக மானியக் குழு பரிவுரை செய்த ஊதிய விகிதங்களின் அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இப்பொருள் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, சாதாரணமாகக் கல்லூரிகளில் இது போன்ற டியூட்டர்கள் இருக்கிறார்கள். அவர்களை சில சமயம் இன்சினீயரிங் காலேஜுக்கு அவருடைய விருப்பத்தைப் பெருத படி நாமே மாற்றுகிறோம். ஆர்ட்ஸ் காலேஜிலிருந்து இன்சினீயரிங் காலேஜுக்குப் போகிறார்கள். ஆர்ட்ஸ் காலேஜுக்கு ஒரு ஸ்கேல், டெக்னி கல் காலேஜுக்கு ஒரு ஸ்கேல் இல்லாதபடி, ஒன்றுக்கு ஒன்று மாற்றக்கூடிய வேலையாக அது இருப்பதால், இன்சினீயரிங் காலேஜில் இதே ஸ்கேலை வைக்க அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : கலைக் கல்லூரியில் இருக்கிற உடற் பயிற்சி ஆசிரியர்களுக்குக் கொடுக்கிற சம்பள விகிதத்தை யு.ஜி.சி.சிபாரிசுப்படி தொழில் துறை நிறுவனங்களுக்குத் தர வேண்டு மென்று இந்திய அரசிற்கு தமிழக அரசு எழுதியிருக்கிறது. அதை மாற்று வதற்கில்லை என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு தங்க ளுடைய பொறுப்பில் அதைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் அது பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அது பற்றிய முடிவு எடுக்கப் படும்.

Ragging.

*44. Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :—

(a) whether there have been any objectionable forms of ragging in any of the professional colleges during the academic year 1969–70 ;

(b) the steps taken by the Government to prevent objectionable ragging during the current academic year ; and

(c) if so, the result of such steps ?

கல்லூரிகளில் மறுக்கத்தக்க வகையான இழி விளையாட்டுகள்

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு கல்வி–சுகாதார அமைச்சர் அவர் கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1969–70–ஆம் கல்வி ஆண்டில் தொழில் கல்லூரிகள் எதிலே னும் மறுக்கத் தக்க வகையான இழி விளையாட்டுகள் (ragging) ஏதேனும் நடைபெற்றனவா ?

(இ) நடப்புக் கல்வியாண்டில் மறுக்கத் தக்க இழி விளையாட்டுக்களைத் தடுக்க அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

(உ) ஆமெனில், அந்த நடவடிக்கைகளினுல் ஏற்பட்ட பலன்கள் யாவை ?